# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 07 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 10

## நாட்டார் பாடல்கள்

1. நாட்டார் பாடல்கள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படும்?

2. நாட்டார்பாடல்களின் வகைகளை எழுதுக?

3. **“ பட்டி பெருக வேணும் தம்பிரானே**
   **பாற்பானை பொங்கவேண்டும்...**
   அ. இங்கு தம்பிரான் எனப்படும் கடவுள் யார்?
   ஆ. இப் பாடல் எத் தலைப்பில் இடம்பெற்றுள்ளது?
   இ. பட்டி பெருதல் எனும் தொடரின் விளக்கம் யாது?

4. **“ மேழி பெருக வேணும் தம்பிரானே**
   **மேதினியோர் வாழ வேண்டும்...**
   அ. மேழி என்பது உணர்த்தும் பொருள் யாது?
   ஆ. மேதினி என்பதன் பொருள் யாது?
   இ. மேழி பெருகுதல் என்பதன் கருத்து யாது?

5. கண்ணூறு, நாவூறு என்பவற்றின் பொருளினை தெளிவுறுத்துக?

6. சினந்தருவி வெட்டுதல், வளந்தருவி வெட்டுதல் என்பதால் விளக்கப்படுவது யாது?

7. **“வளந்தருவி வெட்டும் இளந்தாரி மாரை**
   **நாவூறு வராமல் காரும் ஐயனே”**
   அ. இப்பாடல் எத்தொழிலுடன் தொடர்புடையது.
   ஆ. இதில் வந்துள்ள கிராமிய நம்பிக்கை யாது?

8. **மண்ணை நம்பி ஏலேலோ மரம் இருக்கிறது ஐலசா**
   **மரத்தை நம்பி ஏலேலோ கிளையிருக்கிறது ஐலசா**
   **கிளையை நம்பி ஏலேலோ பூவிருக்கிறது ஐலசா**
   அ. இப்பாடலை பாடுபவர்கள் யார்?
   ஆ. இதனூடாக கவிஞர் எதனை புலப்படுத்த விரும்புகின்றார்.

9. **காதற் பாடலில் காதலன் தன் காதலியை எவ்வாறாக வர்ணித்து பல பெயர்களினால் உருவகிக்கின்றான்?**

10. **ஆசைக் கிளியே என்ர ஆசியத்து உம்மாவே ஓசைக் குரல்லே..**

அ. இங்கு ஆசியத்து உம்மா எனக் குறிக்கப்படுவது யாது ?

ஆ. இக் கூற்று யாரால் உரைக்கப்பட்டுள்ளது ?

11. **மாமி மகளே என்ர மருதக்கிளி வங்கிசமே ஏலங்கிராம்பே...**

அ. வங்கிசம் என்பது உணர்த்தும் கருத்து யாது? கிராம்பு என்பதன் திருந்திய வடிவம் யாது?

ஆ. மாமி மகளே என்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படும் உறவு முறை யாது?

12. **அல்லா மேல் ஆனை உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி...**

அ. காட்டுப்பள்ளி என்பதன் பொருள் யாது?

ஆ. இங்கு ஆணை என்பது எதனை குறிக்கின்றது.

13. **சீனத்து செப்பே என்ர சிங்காரப் பூநிலவே...**

அ. இங்கு மச்சி என்பதன் திருத்தமான வடிவம் யாது?

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?

## ஆ பகுதி

01. ஏர்ப்பாடலில், உழவர்களின் பரந்த மனப்பாங்கு எவ்வாறு வெளிப்படுகின்றது? அல்லது சிவபெருமானிடம் வேண்டப்படுபவை யாவை?

02. ஏர்ப்பாடலில், வெளிப்படுத்தப்படும் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் எவை?

03. ரிவி வெட்டு பாடலில், அரிவு வெட்டும் இளந்தாரிமாரை எவ்வாறு உவமித்து கூறியுள்ளனர்

04. . அரிவி வெட்டும் அரிவாளின் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது.

05. பல கஷ்ரத்தின் மத்தியிலும் நான் உன் நினைவுடனே இருக்கின்றேன் எனும் தன்மை எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது.?

06. காதலன் தன் காதலி மீது கொண்ட அதீத அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?

07. காதலன், தன் காதலை நம்புமாறு எடுத்துக்காட்டும் வரிகள் எவை? தன் காதலிக்காக இயற்கையை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றான்.